# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**<u>O.S.No.35/2019</u>**

PW2– இராவணன் நாள்.10.02.2026

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு எழுத, படிக்க தெரியும். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை தயார் செய்ய வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது வாதிதான். வாதியின் மகளை நான் திருமணம் செய்துள்ளேன். எங்கள் உறுப்பினர்களின் சம்மதத்தோடு அந்த திருமணம் செய்தேன். எங்கள் உறுப்பினர்களின் சம்மதத்தோடு நான் திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள 31.05.1996ம் தேதியிட்ட பாகத்தின் போது தாவா சொத்தனாது வாதியின் தயாருக்கு ஜீவனாம்சத்திற்கு ஒதுக்கப்பட்டு அவர் இறப்பிற்கு பின்னர் வாதி அடைய வேண்டியது என்று எங்கு வைத்து, எப்போது, யார் முன்னிலையில் பேசப்பட்டது என்ற விவரம் நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போன்று எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை என்றும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 31.05.1996ம் தேதியிட்ட பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. அந்த பத்திரத்தை தங்கையா என்னிடம் காண்பித்தார். அதிலுள்ள வாசகங்கள் எனக்கு தெரியுமா என்றால் நான் படித்துபார்க்கவில்லை, என்னிடம் காண்பித்தார்கள். நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று தாவா சொத்து வாதியின் தாயாருக்கு ஒதுக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விவரம் பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் என்றும் நான் கூறுவது போன்று எந்த பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அடிக்கடி அவர் குடும்பத்தில் சண்டைபோட்டு வெளியே தங்கியிருப்பார் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி 1983ம் ஆண்டு நெடுஞ்சாலை துறையில் பணியில் சேர்ந்த விவரம் எனக்கு தெரியும். அவர் அரசாங்க பணியில் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு தனிப்பட்ட ஊதியமாக அரசாங்க வருமானம் வந்தது என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதி அவருடைய தனிப்பட்ட வருமானத்தை கொண்டு அவர் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனிப்பட்ட பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து அவர் ஆவணங்கள் எழுதிகொடுக்க முழு உரிமையுண்டு என்றும், அதன்அடிப்படையில் தான் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து குடும்பசொத்து என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மேற்படி குறுக்குவிசாரணையை 10ம் தரப்பு பிரதிவாதி தத்துஎடுத்துகொள்ளப்படுகிறது.)**

**மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

**இல்லை**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.